முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 91/2022

**வாதி தரப்பு சாட்சி-1 ஜோதிமணி திரு.M.கோபிநாத் பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 01.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) தாவா சொத்தில் என்ன சாகுபடி செய்கிறேன் என்றால் வாழை வைத்துள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் வாழை சாகுபடி செய்துள்ளதாக 18.06.2024-ல் கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 9 ல் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் எனது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருப்பதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. சர்வே எண்.207/32 பழனியாண்டி மூப்பனின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. என் தாயாருக்கு பாத்தியப்பட்டு அவர் எழுதிக்கொடுத்த உயிலின் அடிப்படையில் நான் அனுபவம் செய்து வருகிறேன். சர்வே எண்.209/24 ல் பட்டா எண்.571 ஆனது பழனியாண்டி மூப்பனின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. என் தாயார் எழுதிக்கொடுத்தது. மேற்படி இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்தைப்பொறுத்து எனது தாயார் எழுதிய உயில் ஆவணத்தில் எந்த சங்கதியும் சொல்லவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை.

2) மேற்படி இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்தைப்பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. சர்வே எண்கள்.207/32 மற்றும் 209/24 ஆகியவற்றை பொறுத்து கிராம கணக்குகள் நகராட்சியாக மாற்றப்பட்டபோது எனது சகோதரர் தங்கையனுக்குதான் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்திற்கு என் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யவேண்டும் என வருவாய்கோட்டாட்சியரிடம் விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி விசாரணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவில் மாவட்ட பதிவாளர் என் தாயார் எழுதிய உயில்ஆவணத்தை ரத்து செய்துவிட்டதால் என் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்கிறேன் என உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

3) தாவா சொத்து 1988 ம் ஆண்டு முதல் அ பதிவேடு என் சகோதரர் தங்கையன் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் எனது தாயார் ஈமச்சடங்குகளை எழிலரசிதான் செய்யவேண்டுமென அவர் எழுதியுள்ளார் என்றால் சரிதான். அதன்படி நடக்கவில்லை என்றால் சரிதான்.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் சட்டம் 2007 ன் படி தாவா சொத்துக்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**